RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s743

# அயோத்திதாச பண்டிதரின் ஆதிவார மாலை பிரசங்கம்

**பெ. விஜயகுமார் [அ, *]**

[அ] தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, புதுக்கல்லூரி, சென்னை-600014, தமிழ்நாடு, இந்தியா.

# Aadivaara (Sunday) Maalai (Evening) Sermon by Pandit Iyothee Thass

**P. Vijayakumar [a, *]**

[a] PG & Research Department of Tamil, The New College, Chennai-600014, Tamil Nadu, India

* Corresponding Author: dr.vijay1285@gmail.com

Received: 07-12-2021
Revised: 28-04-2022
Accepted: 12-05-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Iyothee Thass Pandit established the 'South Indian Sakya Buddhist Association' (1898) in Rayapetta, Chennai and through it he did various things for Buddhist revival and social change. One of them was the evening sermon held every Sunday. From 1907 to 1914 more than twenty sermon summaries appeared in the magazine 'Tamil'. At that time, Pandit Ayodhitasa's sermons helped a lot in enlightening the people. The ideologies that had dominated the society and the common people for a long time were rendered meaningless after the preaching of Pandit Iyothee Thass. His activities were primarily to restore Buddhism at the cultural level and to eradicate politically and oppose the intrigues that surrounded the common people. Who is man? What is religion? Who is Brahmin? The sermons are based on the answers to the questions included. He preached on the truth of the Bhagavad Gita, the origin of the name India, the differences in the history of the Buddha, etc., in a rational and Buddhist context, with literary flair and satire. These are innovative and primary to today's world of knowledge. M. Singaravelar, who operated in the field of knowledge in the twentieth century, P. Lakshmi Narasu, K. Swapaneshwari Ambal and others preached at the Buddhist Society and supported the social change. Pandit has also delivered speeches along with eminent personalities with intellectual backgrounds. The sermons initiated by the Pandit were conducted in many branches of the South Indian Sakya Buddhist Association. The Buddhist association of Kolar Gold Field, Bangalore, Irangoon (Burma), Tirupattur, Nettal (South Africa) carried out the preaching very well. Youth associations which functioned as a part of the Buddhist association also gave importance to preaching. The seed of preaching planted by the Pandit through the Buddhist association grew into a huge bodhi tree during his lifetime. It is the ideological extension of the Aadivaara (Sunday) Malai (Evening) sermon that continues in today's Buddhist and rationalist movements.

**Keywords:** Iyothee Thass Pandit, Aadivaara Malai, Swapaneshwari, Buddhist

## முன்னுரை

ஆதிவாரம் என்பது வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக் கிழமையைக் குறிக்கும். இராயப்பேட்டை தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை பிரசங்கம் நடைபெற்று வந்தது. இந்தப் பிரசங்கத்திற்கு அயோத்திதாச பண்டிதர் ‘ஆதிவார மாலை பிரசங்கம்’ என்று பெயர் அமைத்திருந்தார். பிரசங்கம் என்பதற்குச் சொற்பொழிவு, உரை, பேச்சு, உபதேசம் என்று பொருள் கொள்ளலாம்.

பிரசங்கங்கள் சமூக மாற்றத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பு செய்துள்ளன. பெரிய பெரிய ஞானிகளும் தீர்க்க தரிசிகளும் தங்களுடைய கருத்துகளைப் பிரசங்கங்கள் வாயிலாகத்தான் மக்களிடையே கொண்டு சேர்த்தனர். புத்தரின் உபதேசங்களும் இயேசுவின் மலை பிரசங்கமும் இன்றும் மக்களிடையே எதிரொலித்துக் கொண்டுதான் உள்ளன. விவேகானந்தரின் சிகாகோ மாநாட்டுச் சொற்பொழிவும் பாபாசாகேப் அம்பேத்கரின் பல சொற்பொழிவுகளும் புகழ் வாய்ந்தவையாக உள்ளன.

120 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பௌத்த சங்கத்தில் பண்டிதர் நிகழ்த்திய பிரசங்கம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றைக்கும் புரிதலுக்குப் பிரசங்கத்தின் கருத்துகள் தேவையாக உள்ளன. பலர் அறியாத தலைப்புகளில் உரை நிகழ்த்தி புதிய கோணத்தில் சிந்திக்க செய்தார். அதன் வாயிலாக மக்களுக்கு அறிவுத் தெளிவை உண்டாக்கினார்.

பண்டிதரின் எண்ணம் எளிய மக்களை ஈடேற்றுவது என்பதுதான். அம்மக்களில் படித்தவர்கள் குறைவு. அப்படி இருக்கும் போது அவர்களிடம் பேசுவதுதான் மிகப்பெரிய மாற்றத்தைக் கொடுக்கும். அதைத்தான் பண்டிதரும் செய்தார். எளிய மக்களுக்கு ஏற்ப எளிமையாகவும் கற்றறிந்தவர்களுக்கு ஏற்ப இலக்கியச் சான்றுகளுடன் பேசி மக்களை ஈர்த்தார். அதுமட்டுமல்லாமல் பலருடைய அறிவுக்குப் பொருந்தாத செயல்களைக் கிண்டல் அடித்தார். அவ்வாறு பகடி செய்யும் போது அவரது பிரசங்கம் இன்னும் அதிகம் கவனம் பெற்றிருக்கும்.

தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்க செயல்பாடுகளில் பிரசங்கம் முதன்மையானதாகக் கருதப்பட்டது (Stalin Rajangam, 2019). ஏனெனில் ஒரு செய்தியை உடனடியாக மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்ப்பதற்குப் பேச்சுதான் சிறந்த வழியாக உள்ளது. அதிலும் உணர்வுப் பூர்வமாகக் கொடுக்க பிரசங்கம் முக்கியமானதாக இருந்தது.

## பண்டிதரின் பிரசங்கங்கள்

பண்டிதர் தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கம் (1898) இராயப்பேட்டையில் தொடங்கிய பிறகுத் தீவிரமான பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வந்தார். இதனால் பௌத்த சங்கத்தில் தொடர்ச்சியாகப் பல நிகழ்வுகள் நடந்தேறின. முழு நிலவு நாள், புத்தர் பிறப்பு, ஞானம் பெற்றது, சங்கராந்தி பண்டிகை உள்ளிட்ட முக்கிய நாள் நிகழ்வுகளில் பௌத்த சங்கம் கோலாகலம் பூண்டது. விருந்து, தானதருமங்கள் செய்யப்பட்டன. பிரசங்கங்கள் நடந்தேறின. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை மாலை சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. ஆளுமைமிக்கத் தலைவர்கள் பகுத்தறிவு சிந்தனையுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். இதில் பெரும்பாலும் பண்டிதரே உரை நிகழ்த்தியுள்ளார். அதில் பண்டிதரின் இருபது பிரசங்கங்கள் எழுத்து வடிவில் கிடைக்கின்றன.

இவை ஒன்றிற்குப் பதில் சொல்லுவது, நெடுங்காலமாகச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற கருத்தியலுக்கு எதிர்வினை ஆற்றுவது. அவ்வாறு எதிர்வினையாற்றி அதன் உண்மையற்ற தன்மையைப் பிரபலப்படுத்துவது எனப் பண்டிதரின் செயல்பாடுகளும் அவரைச் சார்ந்தவர்களின் செயல்பாடுகளும் அமைந்திருந்தன. குறிப்பாக எளிய மக்களின் வாழ்வியல் சார்ந்தவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். பண்பாட்டுத் தளத்தில் உள்ள பௌத்தத்தை மீட்டெடுக்கவும் எளிய மக்களைச் சூழ்ந்திருக்கக் கூடிய சூழ்ச்சியை அரசியல் ரீதியாகக் களையவும், எதிர்க்கவும் இவரது செயல்பாடுகள் முதன்மையாக இருந்தன. நெடுங்காலமாக மக்கள் மீது திணிக்கப்பட்ட அல்லது ஆதிக்கம் செலுத்திவரும் கருத்தியல்கள் பண்டிதரின் பொழிவுக்குப் பிறகு ஒரு புரிதலுக்கு வந்தன.

## மதமும் மனிதனும்

பண்டிதர் இராயப்பேட்டை பௌத்த சங்கத்தில் நிகழ்த்திய உரைகளில் முதலாவதாக நமக்குக் கிடைப்பது 2 அக்டோபர் 1907 இல் நடந்த 'மதமும் மனிதனும்' எனும் தலைப்பில் அமைந்த உரையின் சுருக்கம்தான். அதில் மேன்மக்கள் யார் அவர்களுடைய மதம் எத்தகையது என்பதை விளக்குகிறார். நெடுங்காலமாகப் பிராமணர்கள் தங்களைத் தாங்களே உயர்ந்தவர்கள் என்றும் தங்கள் மதமே இந்து

மதம் என்றும் கூறி பிறரை தாழ்த்தி அடிமைப்படுத்தி வருகின்றனர். இதற்குப் பண்டிதர் உரையில் பதில் கொடுக்கிறார். "வித்தை (கல்வி), புத்தி, ஈகை, சன்மார்க்கம் நிறைந்துள்ளோரே உயர்ந்தோர் என்றும் அவர்களையே மேன்மக்கள் என்றும் அறஹத்துக்கள் என்றும் வகுத்திருக்கிறார்கள்." இத்தகைய பண்புகள் இல்லாத பிராமணர்கள் எப்படி உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ள முடியும் என்பது பண்டிதரின் கேள்வியாக உள்ளது (Vijayakumar, 2021).

மதம் என்பது மேற்கூறிய தகுதி உடையவர்கள் அமைப்பது. ஏழைகளுக்கும் கனவான்களுக்கும் விவேகிகளுக்கும் மூடர்களுக்கும் ரோகிகளுக்கும் அவரோகிகளுக்கும் பொதுவானதே மதம் என்று கூறப்படும். வயிற்றுப் பிழைப்புக்காகப் பொய்க் கதைகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டதை எப்படி மதம் என்று ஏற்றுக்கொள்ள முடியும் என்று மக்களுக்குத் தெளிவுபடுத்துகிறார். இவ்விடத்தில் பிராமணியத்தின் ஆதிக்க சிந்தனை பண்டிதரால் உடைக்கப்படுகிறது (Angayarkanni & Kiruthiga, 2021).

## பிராமணன் யார்?

பிராமணன் யார்? என்பது பற்றிய சொற்பொழிவு ஒன்றைப் பண்டிதர் நிகழ்த்தியுள்ளார். அதன்படி பிராமணன் எனும் பெயர் யாருக்கு உரியது என்றும் அத்தகைய பிராமணன் தற்காலம் இருக்கிறானா? என்று உரையில் விவரிக்கிறார். பல்வேறு பண்புகளை உள்ளடக்கிய நான்கு வகையான லட்சணங்களைக் குறிப்பிடுகிறார். இந்த நான்கு லட்சணங்களும் பொருந்தி இருப்பவர்களே பிராமணர்கள். அப்படிப்பட்ட பிராமணர்களை இந்திய தேசத்தில் காணாமல் இருப்பது நமது துர்பாக்கியம் என்கிறார்.

இப்போதிருக்கும் பிராமணர்கள் மேற்குறித்த லட்சணங்கள் ஏதும் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. இவ்விடத்தில் பண்டிதரின் கருத்தை ஓர் எதிர்ப்பாகத்தான் பார்க்க வேண்டும். நெடுங்காலம் பிராமணர்கள் இந்த மண்ணின் மீது செலுத்துகின்ற ஆதிக்கம்தான் உண்மையான பிராமணர்களே இல்லை என்ற எதிர்வினையாகப் பண்டிதரின் மூலம் வெளிப்படுகிறது.

## கருமம் (செயல்)

பண்டிதர் உரைகளில் பேசுகின்ற விஷயங்கள் மக்கள் பகுத்தறிவோடு வாழ்வதற்குப் பெரிதும் துணை நிற்கின்றன. 16 அக்டோபர் 1907 இல் இராயப்பேட்டை பௌத்த சங்கத்தில் பேசுபொருளாக அமைந்தது கருமம் எனும் தலைப்பாகும். இதில் நற்கருமம் துற்கருமம் அதாவது நல்ல செயல், கெட்ட செயல் பற்றி விவரிக்கிறார்.

"ஓர்பிராமணனை சூத்திரன் அடிப்பானானால் அது துற்கருமம். ஓர் பிராமணன் சூத்திரனை அடித்தக்கால்அடங்கி நிற்பது நற்கருமம்." இதைத்தான் பிராமணர்கள் நல்ல செயல் என்றும் கெட்ட செயல் என்றும் வகுத்திருக்கிறார்கள். மேலும் கருமத்தில் உள்ள முரண்பாட்டைப் பண்டிதர் விவரிக்கிறார் (Vijayakumar, 2021).

"சென்னையிலுள்ளப் பெண்கள் யாவரும் மார்பின்மேல் வஸ்திர மணைந்துக் கொள்ள வேண்டியது விதி. அவர்கள்தான் நற்கருமிகள். வஸ்திர மணையாதவர்கள் துற்கருமிகள். கள்ளிக் கோட்டையிலுள்ள பெண்கள் யாவரும் மார்பின் பேரில் வஸ்திர மணையப்போகாது அவர்கள் நற்கருமிகள். வஸ்திர மணைபவர்கள் துற்கருமிகள்." என்று அக்கால சமூகத்தில் நிலவிய முரண்பாட்டை, மக்களின் இன்னலை எளிமையாகத் தன்னுடைய பேச்சின் மூலமாகக் கொண்டு வந்து தெளிவுபடுத்தியுள்ளார் (Vijayakumar, 2021). சிறிய தவறைக் கூட ஏற்றுக் கொள்ள மனம் இல்லாத மனிதர்கள், நல்லது நடந்தால் அது தன்னால் நடந்தது என்றும் துன்பம் நடந்தால் எல்லாம் அவன் செயல் என்றும் இறைவன் மீது பழியைப் போட்டு ஒதுங்கிக் கொள்வதையும் குறிப்பிடுகிறார்.

ஒரு மனிதன் கடவுள் உண்டென்று நம்பி கெட்டது செய்தாலும் கடவுள் இல்லையென்று நம்பி கெட்டது செய்தாலும் அவன் கெட்டதே அடைவான். கடவுள் உண்டென்று நல்லது செய்தாலும் கடவுள்

இல்லை என்று நல்லது செய்தாலும் நல்லதே அடைவான் என்கிறார். நாம் செய்கின்ற நல்ல செயல்தான் கடவுளாக உள்ளதால் நன்மையைச் செய்யுங்கள் என்று பிரசங்கத்தை முடித்துள்ளார்.

## இந்தியா

இந்தியா எனும் பெயர் யாரால் ஏற்பட்டது என்பதை அறிவது அவசியமானது. பொதுவாக இந்துக்கள் அதிகமாக வாழ்கின்ற தேசம் ஆதலால் இந்தியா எனும் பெயர் வாய்த்தது என்று மேம்போக்காக கருதுகின்றனர். 'சிந்து' எனும் நதியின் பெயரை அடிப்படையாகக் கொண்டு இந்தியா எனும் பெயர் வந்தது என்பர். 'பரதன்' எனும் மன்னன் ஆண்டதால் பாரதம் என்ற பெயரையும் பெற்றது என்பர். 'இந்துஸ்தானம்' என்றும் வழங்குவர்.

இவ்விடத்தில் பண்டிதரின் கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நம் தேசத்திற்கு இந்தியா எனும் பெயர் புத்தரால் ஏற்பட்டது என்கிறார். எவ்வாறெனில் ஐம்புலன்களை அடக்கிய புத்தருக்கு ஐந்திரர் என்னும் பெயர் வடமொழியில் உண்டு. அப்பெயர் மருவி தமிழில் இந்திரர் என்று அழைத்து வந்தனர். ஐம்புலனை அடக்கிய சிறப்பு குறித்தே புத்தருக்கு இந்திர விழாவும் கொண்டாடப்பட்டது. இந்திர விழா கொண்டாடப்பட்ட இந்திரர் தேசமே இந்தியாவாக மாறியது. தமிழ் பௌத்தக் காப்பியமான மணிமேகலை இந்திரவிழா புகார் நகரில் மிகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டதைக் காட்டுகிறது. திருக்குறளும் இதற்குச் சான்றாக அமைகிறது.

ஐம்புலனும் அடக்கிய புத்தர்தான் இந்திரன் எனப் பண்டிதர் வழித் தெளியலாம். மேலும் பண்டிதர் வரதன் எனும் புத்தரின் பெயரின் வழியாகத்தான் பரதன் எனும் பெயர் வந்து பாரதம் என்ற பெயரையும் பெற்றது என்கிறார்.

## பகவத்கீதை

இந்து மதத்தின் புனித நூலாகக் கருதப்படுவது பகவத்கீதை. புனித நூல் என்று ஒரு பக்கம் போற்றப்பட்டாலும் மறுபக்கம் அதன் மீதான விமர்சனங்கள் குழப்பங்கள் இருந்து கொண்டே தான் உள்ளன. நெடுநாளாக கீதையில் உள்ள முரண்பாட்டை, குழப்பத்தை விமர்சனத்திற்கு உட்படுத்தியுள்ளார் பண்டிதர். பகவத்கீதைத் தொடர்பாக இரண்டு சொற்பொழிவுகள் பண்டிதரால் நிகழ்த்தப்பட்டுள்ளன. பல இடங்களில் கீதையை விமர்சனம் செய்தும் தமிழன் இதழில் எழுதி உள்ளார்.

போர்க்களத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசமே கீதை. இதைப் பின்னாளில் பாரதத்துடன் சேர்த்ததாக அறியமுடிகிறது. இதனால் பகவத்கீதையைப் 'பாரதத்தின் தொங்கல்' என்கிறார். வரலாற்று ஆதாரங்கள் எதுவும் இல்லாத 'கற்பனைக் கதை' என்றும் குறிப்பிடுகிறார். கீதையின் காலத்தைக் குறித்தும் பேசுகிறார். கீதையின் காலத்தைக் குறிப்பிடும்போது அதன் பழமையை மிகைப்படுத்தி சொல்ல வேண்டும் என்பதற்காக மூன்றாயிரம் நான்காயிரம் ஐந்தாயிரம் வருடத்திற்கு முன் தோன்றியது என்றெல்லாம் சொல்லப்படுவது உண்டு. இதற்குச் சில சரித்திர ஆதாரங்களைக் கொண்டு புத்தருக்குப் பின்பே பாரதம், கீதை போன்றவை தோன்றியுள்ளது என்று நிறுவுகிறார்.

புத்தர் பரிநிப்பாணம் அடைந்த பிறகு அவரது அஸ்தியை ஏழு பாகங்களாகப் பிரித்து ஏழு திசைகளில் கொண்டு சென்று விகாரங்கள் அமைக்கப்பட்டன. அதில் ஒன்றுதான் அஸ்திநாதபுரம் ஆகும். புத்தரின் அஸ்தியைப் புதைத்தக் காரணம் கொண்டு அந்நகருக்கு அஸ்திநாதபுரம் எனும் பெயர் ஏற்பட்டுள்ளது. இப்பகுதி பாரதத்தில் குறிப்பிடப்படுவதால் புத்தருக்குப் பின்பே பாரதம் நடந்திருக்கும் எனும் முடிவுக்கு வருகிறார்.

தசரதனும் ராமனும் புத்தருக்குப் பின்பே தோன்றியிருக்க வேண்டும் என்பதற்கான குறிப்பு ஒன்றையும் தருகிறார்.

"வசிட்டர் இராமருக்குக் கூறும் ஞானோபதேசத்தில் உத்தாலகன் என்னும் ஓர் அரசன் இருந்தான் அவன் புத்தரைப் போல் தாமரைப் புட்பத்தில் வீற்று ஞான நிலைப் பெற்றான் என்று இராமருக்குப்

போதித்துள்ளார்" என்று குறிப்பிடுகிறார் (Vijayakumar, 2021). அனுமன் இலங்கைக்குப் போகும் பொழுது பழந்தமிழகத்தில் அமைந்திருந்த புத்த விகார் மீது அமர்ந்து சென்றதாகவும் குறிப்பு காணப்படுகிறது.

பண்டிதர் கீதையோடு தொடர்புடைய செய்திகளில் காணப்படும் முரண்பாடுகளை நான்காகக் குறிப்பிடுகிறார். அவை 1. சரித்திர முரண், 2. திரிமூர்த்திகளின் செயல்முரண், 3. வேதாந்த முரண் 4. மத்துவாசாரியார் பற்றிய முரண் எனப் பகுத்துள்ளார்.

பாரதத்தில் வெகுவாகப் பொய்கள் சேர்க்கப்பட்டு எழுதியுள்ளதை இலக்கியச் சான்றாதாரத்தோடு தருகிறார். சமூகத்தில் சாதியை ஏற்படுத்தியவர்கள் கீதையையும் ஏற்படுத்தினர். அதில் சிற்சில நற்கருத்துகளைப் பௌத்தத்தில் இருந்து எடுத்துக் கொண்டதாகவும் கூறியுள்ளார்.

சமண பௌத்த மதங்களின் நற்கருத்துகள் பின்னாளில் வந்த சைவமும் வைணவமும் உள்வாங்கியது என்பதை இந்த இடத்தில் சிந்தித்துப் பார்த்தால் பண்டிதர் கூறிய கருத்தில் உள்ள உண்மை விளங்கும். இன்னும் பல கேள்விகளோடு பண்டிதரின் உரைகள் விரிந்து கொண்டே செல்கின்றன.

இந்துமதம் தனக்கு எதிரானதை நேரடியாக வீழ்த்த நினைக்கும். அப்படி முடியவில்லை என்றால் அதனை உள்வாங்கி தனதாக்கிக் கொண்டு வீழ்த்தும் என்பதை நெடுங்காலமாக அறிந்திருக்கிறோம். அப்படித்தான் பௌத்தத்தை வீழ்த்த நினைத்து முடியாமல் விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றாகப் புத்தரை இணைத்துக் கொண்டு வீழ்த்தியது.

## புத்தர் சரித்திரமும் அதன் வேறுபாடும்

பண்டிதர் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகப் புத்தரைக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கான காரணத்தையும் அதில் உள்ள முரண்பாட்டையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

பத்து அவதாரங்களில் ஒன்பதாவது அவதாரம் புத்தர் என்றும் ஓர் இடத்தில் ஒன்பதாவது அவதாரம் கிருஷ்ணர் என்றும் முரண்பட்ட கருத்துகளைக் கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார். இதில் முதன்மையான கேள்வி ஒன்றையும் முன்வைக்கிறார். விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகப் புத்தரைக் குறிப்பிடும்போது உலகம் முழுவதிலும் வரலாறு ஏன் இவ்வாறாகவே இல்லை என்ற கேள்வியின் மூலம் பொய்ப் புராண கட்டுக் கதைகளை உடைத்தெறிகிறார்.

புராணங்களில் கூறியுள்ள புத்தர் சரித்திரமும் அதன் வேறுபாடும் என்று 1 ஜனவரி 1908 இல் இராயப்பேட்டை பௌத்தச் சங்கத்தில் பொழிவு நிகழ்த்தி மக்களுக்கு மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இது போன்று பல தலைப்புகளில் பிரசங்கம் நிகழ்த்தியுள்ளார். அவை இன்றும் கவனத்தில் கொள்ள வேண்டியவையாக உள்ளன.

## பௌத்த சங்கத்தில் பிரசங்கம் நிகழ்த்தியவர்கள்

பண்டிதருடன் இணைந்து செயல்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் P. லட்சுமி நரசுவும் (1861-1934), ம. சிங்காரவேலர் ஆகிய இருவரும் ஆவர். இம்மூவரும் இணைந்து அக்காலத்தில் பௌத்தத்தையும் பகுத்தறிவையும் மக்களிடையே பரப்பினர் (Jeenaraju, 1990). தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தில் ம. சிங்காரவேலரும் மகாபோதி சங்கத்தில் பண்டிதரும் பிரசங்கம் நிகழ்த்தியுள்ளனர். P. லட்சுமி நரசு தலைமையில் இருவரும் பிரசங்கம் செய்துள்ளனர். இவ்வாறாக இம்மூவரும் இணைந்து சமூக மாற்றத்திற்கு வித்திட்டனர். இவர்களைப் போன்றே ம. மாசிலாமணி முதலியார், சோடச அவதானம் ஸ்ரீமந் பூஞ்சோலை முத்துவீர நாவலர், தமிழ் மாது கோ. ஸ்வப்பனேஸ்வரி அம்பாள் உள்ளிட்ட பலரும் ஆதிவாரம் மாலையில் பிரசங்கம் நிகழ்த்தினர் (Vijayakumar, 2022).

## முடிவுரை

பண்டிதர் தொடங்கிய பிரசங்கம் தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தின் கிளைகளிலும் முன்னெடுக்கப்பட்டன. மாரிகுப்பம், பெங்களூர், இரங்கூன், திருப்பத்தூர், நெட்டால் உள்ளிட்ட பௌத்த சங்கங்களில் தொடர்ச்சியாக பொழிவுகள் நடத்தப்பட்டன. சங்கங்கள் பண்டிதரின் கருத்துகளைப் பிரசங்கத்தின் வழியாக மக்களிடையே கொண்டு சேர்ப்பதில் தீவிரம் காட்டின. இதனைத் தொடர்ந்து பௌத்த சங்கத்தின் ஒரு பகுதியாக விளங்கிய, பின்னாளில் தொடங்கப்பட்ட தென்னிந்திய சாக்கிய பௌத்த வாலிபர் சங்கங்கள் (Y.M.B.A) பிரசங்கத்தை முன்னெடுத்து நடத்தி சென்றன. சென்னை, தங்கவயல் பௌத்த வாலிபர் சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட்டன. அவற்றின் செயல்பாடுகள், பிரசங்கங்கள் முக்கியமானவையாக விளங்குகின்றன. பௌத்த சங்கத்தின் வழியாகப் பண்டிதர் போட்ட பிரசங்கம் எனும் விதை அவர் வாழும் காலத்திலேயே பிரமாண்ட போதி விருட்சமாகக் கிளைபரப்பி நின்றது. ஆதிவார மாலை பிரசங்கத்தின் கருத்தியல் நீட்சிதான் இன்றைய பௌத்த, பகுத்தறிவு இயக்கங்களிலும் தொடர்ந்து வருகின்றன.

## References


Angayarkanni, C., Kiruthiga, K., (2021) Caste and dynamics of Iyothee Thass, International Research Journal of Tamil, 3(S-1), 290-295. https://doi.org/10.34256/irjt21s147

Jeenaraju, N., (1990) Boutha sadangu muraikal, Thenninthiya Boutha Sanga Veliyidu, Chennai, India.

Stalin Rajangam, (2019) Iyodhee Thass Pandithar: A Pioneer in Dalit History and Literature, The Wire, Accessed from: https://thewire.in/history/iyodhee-thass-pandithar-a-pioneer-in-dalit-history-and-literature

Vijayakumar, P., (2021) Iyotheethassa Panditharin Sorpolivugal, Babasaheb Ambedkar Kalai Ilakkiya Sangam, Chennai, India.

Vijayakumar, P., (2022). Tamizh Maathu Ko Swappaneshwari Ambal, International Research Journal of Tamil, 4(SPL 2), 160-166. https://doi.org/10.34256/irjt22s225



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License